1139

1381

OFFICE OF THE ... BOOKS
16 FEB 1928
MADRAS

No. M. 2147.

# THE "AGRICULTURIST"

***A monthly Journal devoted to Agriculture and its allied subjects.***

# "கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.



| | | |
|---|---|---|
| Vol. 10<br>புத்தகம் 10. | பிரபவஸு மாசி மீ 1உ<br>1928-ம் ஸு பிப்ரவரி மீ 13உ | No. 11<br>பிரதி. 11 |



| Contents | Page | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|---|
| Tanjore & Trichy Districts Mirasdars' Conference | 259 | தஞ்சாவூர் திருச்சி ஜில்லாக்களின் மிராசுதார்களின் கூட்டம் | 259 |
| The cultivation, preparation and utilisation of the Groundnut | 264 | மணிலாக் கொட்டை சாகுபடி செய் சேர்த்தி உபயோகம் முதலியன | 264 |
| News & Notes | 266 | குறிப்புகள் | 266 |
| Coconut | 267 | தென்னை | 267 |
| Correspondence | 279 | கடிதம் | 279 |
| Almanack | 282 | பஞ்சாங்கம் | 282 |

**Editor Rao Bahadur J. Chelvaranga Raju**

**"Jagannadha Baugh" Saidapet.**

Annual Subscription Including Postage Re. one only.

CopyRight] [Registered.

# "கிருஷிகன்"

## சந்தா முதலிய விவரங்கள்

(1) எந்தமாதத்தில் சந்தாதாராய்ச் சேர்ந்த போதிலும் அந்த வருஷ சித்திரை மாதத்திலிருந்துதான் கணக்கு வைக்கப்படும். கூடிய வரையில் அந்தந்த வருஷத்திய மூர்தின சஞ்சிகைகளைக் கொடுக்கப்படும்.

(2) வருஷ சந்தாவாகிய ரூபாய் ஒன்றை காலணாதபால் முத்திரைகளாக வாகிலும், அல்லது மணியார்டர் மூலமாயும் அனுப்பலாம்: வெளி நாட்டார் ரூ 1—4—0 அனுப்பவேண்டும்.

(3) பத்திரிகை தவறாது பிரதி தமிழ் மாதம் முதல் தேதி இங்கிருந்து அனுப்பப்படும். பத்திரிகை குறிப்பிட்ட காலத்தில் தங்களுக்குச் சேரா விட்டால் அப்போதே நமக்கு அவ்விஷயத்தைத் தெரிவித்தால் பத்திரிகை சேராதவிஷயத்தைப் பற்றி விசாரணை செய்வோம். 10 தினங்களுக்கு அதிகமாய் தாமதித்து எழுதும் கடிதங்கள் கவனிக்கப் பட மாட்டா.

(4) விவசாயமும் அதைச் சார்ந்த விஷயங்களும் தவிர இதர விஷயங்கள் இப்பத்திரிகையில் வெளிவரா, அதிலும் எவ்வித நிந்தனையுள்ள விஷயங்களும் அங்கீகரிக்கப் படமாட்டாது.

(5) இப்பத்திரிகையின் சகல உரிமைகளையும் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்திருப்பதால் இதில் எழுதும் விஷயங்களை எழுத்து மூலமாய் அநுமதிபெறாமல் எவரும் எடுக்கக்கூடாது.

"கிருஷிகன்" மானேஜர்.

ஜெகந்நாதபாக், சைதாப்பேட்டை

---


# கம்மபாலன்

## தமிழ் மாதப் பதிப்பு

தென்னாட்டில் கம்ம ஜாதீயப் பத்திரிகை இஃதொன்றே. கிராமவாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருட சந்தா ரூ. 1 தான்.

ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தக பாரங்கள் எம்மிடம் கிடைக்கும்.

R. வெங்கடசாமி நாயுடு,

பத்திராதிபர் கம்மபாலன்,

திருத்தாங்கல்.

# THE "AGRICULTURIST"

***A monthly Journal devoted to Agriculture and its allied subjects.***

# "கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

| Vol. 10<br>புத்தகம் 10 | பிரபவஸு மாசி மீ 1உ<br>1928-ம் ஸு பிப்ரவரி மீ 13உ | No. 11<br>பிரதி. 11 |
|---|---|---|


## Tanjore & Trichy Districts Mirasdars' conference.

## தஞ்சாவூர் திருச்சி ஜில்லாக்களின் மிராசுதார்களின் கூட்டம்

தஞ்சாவூர்ஜில்லா ஆடுதுறை விவசாயப் பரீட்சார்த்தப் பண்ணையில் 1928 ம் ஸு ஜனவரி மீ 8.உ ஷை மிராசுதாரர்களின் கூட்டம் கூடிற்று. அப்போது கோயம்புத்தூர் விவசாய காலேஜ் பிரின்சிபாலாயிருந்து இப்போது உபகாரச் சம்பளம் பெற்றிருக்கும் ஸ்ரீமான் ராவ் பகதூர் M. R. ராமசாமி சிவன் ஐயரவர்கள் அக்ராசனம் வஹித்தார்கள். இருஜில்லாக்களிலிருந்தும் அநேக மிராசுதாரர்கள் அக்கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

அப்போது அன்று விவசாயப் பொருட்காட்சியொன்றும் நடைபெற்றது. அதில் "பொறுக்கு நெல்விதை" சேகரிப்பதற்கு உபயோகமான விஷயங்களெல்லாம் படங்களின் மூலமாயும், சிறு உதாரணக் கருவிகளாலும் எல்லோருக்கும் எளிதில் தமக்குத் தாமாகவே அர்த்தமாகும்படியான சுலபமான நடையில் விவரித்துக் காட்டப் பட்டன. பொறுக்கி எடுத்த பலதினுசு நெல்வகைகள், அவைகள் பயிரிடும் விதம், மாசூல் முதலியவைகளும் எழுதிவைக்கப்பட்டிருந்தன. அத்துடன் தண்ணீர் கட்டுள்ள நிலங்களிலும், வெள்ளப் பெருக்குள்ள நிலங்களிலும் சாகுபடி செய்யக்கூடிய நெல்விதை தினுசுகளும் வைக்கப் பட்டிருந்தன. முந்திய கிருஷிகன் சஞ்சிகையில் வெளியிட்டிருக்கும் நண்டுகளை நாசம் செய்யும் மார்க்கங்களையும், அந்த நண்டுகளையே காயப்போட்டு எருவாக உபயோகிப்பதால் நெல்பயிர் தக்க மாசூல் கொடுப்பதையும், விவசாயிகளுக்கு தீங்கிழைக்க வந்த நண்டுகள் நாசமாகி எருவாகமாறி விவசாயிகளுக்கு உபகாரமாவதையும் நன்கு விவரித்துக் காட்டப்பட்டிருந்தது.

கடைசியாக நாற்றுப் பிடுங்கிய உடனே நடுவதிலும், மறுநாள் மூன்றாம் நாட்களில் நடுவதிலும் மாசூலில் ஏதாவது வித்தியாசம் ஏற்படுகிறதா வென்று பார்த்ததில் நாற்றுப் பிடுங்கிய மூன்று தினங்கள் வரையில் நடுவதில் மாசூலில் எவ்வித வித்யாசமும் ஏற்பட வில்லையென்று பரீட்சார்த்தமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட விதத்தையும் தெரிவிக்கப்பட்டது.

அக்ராசனாதிபதியின் உபன்யாசச் சுருக்கம்

"நான் சுமார் 25 வருஷங்களுக்கு முன் தஞ்சாவூர் விவசாய சங்கத்தில் ஒருமுறை பிரசங்கம் செய்தபோது எடுத்துக் கூறிய விஷயங்களில் காலபேதமாறுபாடுகளால் சில தற்காலத்திற்கு பொருத்தமற்றவையாயினும் அவற்றுள் பெரும்பான்மையானவை இன்றும் பொருத்தமுடையதாகவே யிருக்கின்றன. சைதாப்பேட்டை விவசாய காலேஜிலிருந்து தேறிய மாணவர்களுக்கு அக்காலத்தில் விவசாய வேலைசெய்வதற்கு ஏது வில்லாமலிருந்தது. இப்போது கோயம்புத்தூருக்கு ஷை கலாசாலை மாற்றப்பட்டபின் மாணவர்கள் பலவிதமான விவசாய வேலைகள் செய்து வருகிறார்கள்.

விவசாயத்தின் முன்னேற்றம் முக்கியமாக மூன்று அம்சங்களைப் பொறுத்திருக்கிறது. அவையாவன.(1) விவசாய சம்மந்தமான விஷயங்களைக் கருணையுடன் விசாரித்தல்.

(2) கவனித்து நடத்தும் சோதனைகள்.

(3) சரிவரஷை விஷயங்களை விவசாயிகளைக் கையாடச் செய்தல்.

விவசாய டிமான்ஸ்டிரேட்டர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சீர்திருத்திய முறையைக் கையாளும்படி தூண்டுவதற்கு முன் விவசாயிகள் அவ்விடத்தில் தலை முறை தத்துவமாய்க் கையாடி வரும் பழக்கங்களை விசாரித் தறிந்து அதன் காரண காரியங்களையும் யூகித்தறிதல் அவசியம்.

சாஸ்திர ஆராய்ச்சிசெய்யும் முறைகளில் அடைந்த லாபநஷ்டங்களை முடிவானதாகக் கருதாமலும்,இரண்டொரு செடிகளையாவது சில செடிகளையாவது வைத்து அதன் மூலமாய்க்கிடைத்த மாசூல் கணக்குகளைக் கொண்டு 10 செடிகளுக்கு இவ்வளவு விளைந்தது. ஒரு ஏக்கருக்கு இத்தனை ஆயிரம் செடிகள் உண்டாகலாம். 10 செடிகளுக்கு இவ்வளவு மாசூலானால் இத்தனை ஆயிரம் செடிகளுக்கு இவ்வளவு பெருத்தமாசூல் கிடைத்து விடும்என்று கணக்குப்போட்டு சொல்வது சரியேயல்ல. இவ்வாறு தானப் பெருக்கம் பெருக்கிப்பார்ப்பது அநேக

மாய் எப்போதும் சரியாகவே இருக்காது. ஆகையால் சில செடிகளில் பரீட்சார்த்தமாயடைந்த விதைகளை எக்கர் வாரியில் விதைத்து அப்போதும் தக்க லாபம் அடைந்தால் மாத்திரம் விவசாயிகளைக் கையாடச் செய்யவேண்டும். அப்படி டிபார்ட்மெண்டார் சோதனை செய்து கண்டு பிடித்துச் சொல்லும் விஷயங்களை மிராசுதார்கள் அங்கீகரித்துச் செய்வது நலம். அப்போதும் சரிவர வருமோ வராதோ என சந்தேகப் படுவோர் ஐந்துசென்ட் அல்லது 10 சென்ட் நிலத்தில் சோதனைகளை நடத்திப் பார்த்துத் திருப்திகரமாயிருந்தால் அதிக விஸ்தீரணத்தில் கையாடுவது நலம்.

நான் சோதனை செய்து பார்த்தமட்டில் இந்த ஜில்லாக்களின் நிலங்கள் உப்பு வாய்வு சத்திலும் (நைட்ரஜன்) பாஸ்கராமில சத்திலும் (Phosphoric Acid) குறைவு பட்டிருக்கிறது. இக்குறைகளை நிவர்த்திப்பதற்கு திருச்சினாப்பள்ளி சமீபத்தில் கிட்டும் பாஸ்கராமிலக் கற்களையும், எலும்பையும் உபயோகித்தால் போதுமானது. ஆனால் இந்திரிய வஸ்துக்களடங்கிய எருக்களை அதிகமாய் உபயோகித்தாலொழிய சரியான மாசூல் கிடைக்காது. கவர்ன்மெண்டார் நிலத்தீர்வை அதிகமாய் வாங்குவதால் அதற்கேற்றதுபோல் விவசாய அபிவிருத்தியில் பொருள் செலவிடக் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆயினும் நாம் கவர்ன்மெண்டாரையே நம்பிக்கொண்டிருக்கக் கூடாது. இதர தேசத்தில் தனவந்தராயிருப்பவர்கள் எவ்வாறு செய்கிறார்களோ அவ்வாறு நாமும் செய்ய வேண்டும்.

அவர்கள் தங்கள் செலவில் தக்க நிபுணர்களை வைத்து சொந்தப் பண்ணைகளில் பரீட்சைகள் நடத்தி லாபம் பெறுகிறார்கள். அவ்வாறு தனவந்தராயிருக்கும் மிராசுதாரர்களும் செய்து வருவார்களானால் தக்க லாபம் அடையலாமென்பதில் கொஞ்சமும் சந்தேகமேயில்லை. திருஷ்டாந்தரமாக லால்குடி கோஆபரேடிவ் சுசைடிகளில் 10 எக்கருள்ள பண்ணைகளை ஸ்தாபித்து விவசாய டிமான்ஸ்டிரேட்டர் மேல்பார்வையில் சங்க அங்கத்தினரே நடத்தியதில் லாபம்வரவில்லையா? இவ்வாறே பெரிய நிலச்சுவான்கள் அவரவர் நிலங்களில் ஏன் வேலைசெய்து இலாபமடையக் கூடாது? தற்காலம் இந்த ஜில்லாக்களிலுள்ள நிலங்கள் எருவின்மையால் ஏக்கர்த்தக்க மாசூல் கொடுப்பதில்லையென நினைக்கிறேன்.

இந்த ஜில்லாவில் போக்குவரத்து சாதனக் குறைவால் நெல் சரியான விலைக்கு விற்க முடியவில்லையென நினைக்கின்றேன்.

ஏதாவது விவசாய சம்மந்தமான உதவிபெற விரும்பினால் அந்த இலாகா விவசாய டிமான்ஸ்ட்ரேட்டருக்கு அரையணா செலவழித்து கடிதம் எழுதினால் அவர் தன் வீடு தேடி வந்து உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறாரென்ற விஷயம் விவசாயிகளில் அநேகருக்குத் தெரியாது. மேலும் கிருஷிகருக்கு ஒரு பைசாகூட செலவில்லாமல் விவசாய டிமான்ஸ்டிரேட்டர்கள் இனமாய் வந்து சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்களென்ற விஷயமும் தெரியாது. ஆகையால் மிராசுதாரர்கள் விவசாய டிமான்ஸ்டிரேட்டர்களை அடிக்கடி வரவழைத்து தங்களுக்கிருக்கும் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து நடப்பது நலம்.

தற்காலம் ஆடுதுறைப் பண்ணையில் பொறுக்கு நெல் விதை பரிசோதனை வேலை செய்யும் நிபுணரின் மூலமாய் சோள தேசம் தனது உன்னதமான நிலையை யடையலாமென்று எதிர்பார்க்கிறேன்."

என்று சொல்லிமுடித்தார். அப்பால் ஆடுதுறை பொறுக்கு நெல்விதைப் பரிசோதனை நிபுணராகிய ஸ்ரீமான R. வெங்கட்டராமன் M. A. அவர்கள் "நன்செய் நிலங்கள் எளங்குன்றுமலிருப்ப தெப்படி" என்னும் விஷயத்தைப்பற்றியும், அந்த இலாகா டெப்டி டைரெக்டரான ஸ்ரீமான் குழந்தைசாமி பிள்ளை அவர்கள் "எருவிடுவதின் நிதானம்" என்னும் விஷயத்தைப் பற்றியும் உபந்யாசங்கள் செய்தார்கள். அவைகளைப்பற்றி பின்னால் விவரமாய் எழுதப்படும்.

கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள்.

(1) 1928—1929 ம் வருஷத்தில் விவசாய சீர்திருத்தத்திற்கு அதிகமாகப் பொருள் கொடுக்கவேண்டுமென்று கவர்ண் மென்ட்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) ஒவ்வொரு தாலுகா தலைநகரிலும் மிருகவைத்ய சாலைகள் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறது.

(3) ஒரு விவசாய நடுத்தரப் பாடசாலையாவது உடனே ஸ்தாபிதம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறது.

(4) கிருஷிகருடைய நிலங்களில் நடத்தப்பட்டுவரும் பரீட்சைகளால் எவ்வித தீர்மானமான முடிவுக்குவர சாத்தியமில்லாமலிருத்தலால் இந்த ஜில்லாவில் ஆடுதுறைப் பண்ணையின் சமீபத்திலாவது அல்லது வேறு எவ்விடத்திலாவது ஒரு சோதனைப்பண்ணை ஸ்தாபிதம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறது.

(5) தற்காலம் மாடுகளிருக்கும் பரிதாபகரமான நிலையை உத்தேசித்து ஒவ்வொரு மிருகவைத்திய சாலைகளிலும் பொலி காளைகளை

சர்க்கார் செலவில் பரிபாலித்து ஜனங்களுடைய உபயோகத்துக்காக விடும்படி கேட்டுக்கொள்ளுகிறது,

(6) கடைசியாக தற்காலம் விவசாய டைரெக்டராயிருக்கும் கனம் ஆன்ஸ்டெட்துரையவர்கள் இந்த இராஜதானியில் மதிக்கத் தக்க வேலை செய்திருக்கிருரென்னும் விஷயத்தை எழுத்து மூலமாய் வைத்திருக்கும்படி தீர்மானிக்கிறது.

அத்துடன் வந்தனோபசாரத்துடன் கூட்டம்கலைந்தது.

மேற்சொன்ன கூட்டத்தில் அக்ராசனம் வஹித்த ஸ்ரீமான் ராவ் பகதூர் M. R. ராமசாமிசிவன்ஐயர் அவர்கள் கூடார்த்தமாய் சொன்ன ஒரு விஷயத்தைப்பற்றி நாம் இங்கு விபரித்துச் சொல்லக்கடமைப் பட்டிருக்கிருேம்.

சைதாப்பேட்டையிலிருந்து கோயம்புத்தூருக்கு விவசாயக் கலாசாலையை மாற்றிய காலையில் கவர்ண்மெண்ட்டார் பரீட்சார்த்தமாய்ச் செய்துபார்த்து அனுகூலமடைந்த விஷயங்களைமட்டும் ஜனங்களுக்குப் பரவச்செய்ய வேண்டுமென்றும், அப்பேர்ப்பட்ட விஷயங்களைமட்டும் கிருஷிகரைக் கையாளும்படி சிபார்சுசெய்ய வேண்டுமென்றும்திட்டம் ஏற்படுத்தினர்கள். தற்காலம் தஞ்சாவூர் ஜில்லாவில்கூட்டச்சங்கங்களில் ஸ்தாபிதம் செய்திருக்கும் விவசாயப் பண்ணைகளில்,

(1) கொங்கண் கலப்பையால் உழுது

(2) பொறுக்கி யெடுத்தநெல்விதையை நாற்றுப் பாவி ஒற்றை அலகாய் நட்டு

(3) தொழு எருவுடன் சல்பேட்ஆப் அம்மோனியா நைட்ரேட் ஆப்சோடா சுபர்பாஸ்பேட்போன்ற எருக்களை உபயோகிப்பது சிலாக்ய மென்று விவசாயடிபார்ட்மெண்ட்டார் சிபார்சு செய்கிருர்கள்.

தொழு எருவுடன் நமது தேசத்தில் சுலபமாயும் சகாயமாயும் ஏராளமாயும் அகப்படக் கூடியதும் அநேக சத்துக்களைக் கொடுக்கக் கூடியதுமான தழை எரு எலும்பு போன்ற எருக்களை உபயோகித்து பரீட்சை செய்து பார்த்து எது குறைவான செலவில் அதிக இலாபந் தரக்கூடிய தென்று பார்த்த பின இவ்வாறு சிபார்சு செய்தார்களா?

மேற் சொன்ன விதங்களில் எந்த சர்க்கார் பண்ணையில் கையாடி அநுகூல மடைந்தார்களென்றும் எந்த அநுபோகத்தையொட்டி சிபார்சு செய்கிருர்களென்றும் சொல்ல முன்வருவார்களா?

அப்படி இதுவரை பரீட்சித்துப் பார்க்காத விஷயமாகில் எந்த ஆதாரத்தின்பேரில் அல்லதுகாரணத்தின்பேரில்சிபார்சுசெய்கிருர்கள்?

சர்க்கார் பண்ணைகளில் பரீட்சித்துப் பார்த்து சித்தியடையாத விஷயமாகில் கவர்ண்மெண்டாரின் திட்டத்திற்கு இது விரோதமா அல்லவா?

ஜே. R. ரங்கராஜு.

# The Cultivation, preparation and Utilisation of the Groundnut.

Continued from page 244.)

# மணிலாக் கொட்டை.

## சாகுபடி, செய்நேர்த்தி உபயோகம் முதலியன

(244-ம் பக்கத் தொடர்ச்சி)

Decorticated nuts:(மெஷினால் உடைத்த வேர்க்கடலை) வேர்க்கடலையை உடைத்துப் பயறுகளாக்க வேண்டியதின் முக்கிய கருத்து என்னை? அவைகளைக் கப்பல் மூலம் ஏற்றுமதி செய்வதற்கான செலவுகளைக் குறைப்பதற்கு வேண்டியே. உடைத்தபிறகு பயறுகள் சீக்கிரம் கெடுதலடைகின்றன. உரித்த பயறுகள் காய்களுக்குள்ளிருக்கும் பயறுகளைப் போல் அதிக நாட்களுக்குப் பழுதடையாமலிருப்பதற்கில்லையென்பதறிந்த தொன்று. இருந்தபோதிலும் ஏற்றுமதியின் செலவுகளைக்குறைக்கவே காய்களை உரித்து விடுவது நன்றெனத் தோன்றிற்று. இது நிற்க, வேர்க்கடலைத் தொலி உடைக்கும் இயந்திரங்கள் இப்பொழுது இந்நாடுகள் உள்பட எந்நாட்டிலும் வேலை செய்து வருகின்றன. அவ் வியந்திரங்களினால் உடைத்தெடுத்தப் பயறுகளை எங்கும் மிகச் சிறப்புற்றது. இவ்விதமன்றி இந்தியாவில் அநேக இடங்களில் காய்களை நனைத்துத் தடிகொண்டடித்துக் கிடைத்தப் பயறுகளை ஏற்றுமதி செய்கிறார்கள். இக்காரணம் பற்றியே இப்பயறுகள் தின்பதற்குதவுவதில்லை. அன்றியும் பயறுகளும் அதி விரைவில் மக்கலடைகின்றமையால் அவைகளிலிருந்துப் பிழிந்த எண்ணெயும் வீட்டுப் பிரயோசனங்களுக்கு உதவுவதின்றாம். ஏற்றுமதி முதலிய சௌகர்யங்களை யுத்தேசித்தே காய்களை உடைத்துவிடுகின்றமையால் பயறுகள் அதி சீக்கிரம் கெடுதலடைகின்றனதெனச் சொன்னோம். இதற்காக வேண்டி மணிலாக்காய்களை உரித்து விடாமல் அவைகளைப் பஞ்சுப்பொதி போல் பிரஸ்ஸில் வைத்திருக்கி மணிலாக் கொட்டை பேல்களாகச் செய்யும் முறையொன்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இவ்விதம் செய்வதால் முதலிலிருந்த அளவைவிட பாதிஅளவிற்கு மூட்டைகளைச் சிறியதாகச் செய்யப்படுகிறது. அதாவது இரண்டு மூட்டைக் கொண்ட காய்களை இறுக்கி ஒரு மூட்டை அளவுக்குக் கட்டப்படுகிறது. இந்த முறைக்கு (Macilwain patent process) மேக் இல்வெயின் பேடன்ட்

முறை என சொல்லப்படும். இவ்விதம் பேல்களாகக் கட்டும்போது காய்களின் தோலிகள் நொறுங்கி விடினும் உள்ளிருக்கும் பயறுகளுக்குக் கெடுதலொன்றும் நேரிடுவதில்லை. இம் முறையில் காய்கள் ஏற்றுமதி செய்வதினால் பயறுகள் சீக்கிரம் மக்கிக் கெட்டுப் போவதற்கேது வில்லை. காய்களும் காற்றோட்டத்தினின்றும் நீக்கப் படுவதால் அவைகளை இறக்குமதி செய்து கொள்ளு மிடங்களிலும் எடையில் குறைவடைவதில்லை. இந்தியாதி சௌகர்யங்களை எண்ணி இம் முறையைக் கையாண்டு வந்தால் நலமெனத் தோன்றுகிறது. ஆனால் இவ்விதமாய்க் காய்களை பேல்களாகக் கட்டும் முறை இந்தியாதேசத்தில் கையாளப் பட்டு வருகிறதா என்பது அறிய வேண்டியதொன்று,* இதற்குப் பத்திராதிபரே விசாரித்து விடைபகர விருப்பம்.

Yield மாசூல்:—மணிலாப் பயிரிலிருந்து கிடைக்கப் பெறும் மாசூல் அந்தந்த தேசத்தின் மண்வளம், செய் நேர்த்தி சீதோஷ்ண நிலைமை இவைகளின் தாரதம்மியத்திற்குத் தகுந்தவாறும் மணிலா தினுசுக்குத் தகுந்தாற் போலுமிருக்கும். நிலத்திற்குச் செய்நேர்த்தி எந்த விதத்திலும் சம்மியானால் மாசூலை அதிகமாகக் கெடுத்து விடுகிறதென்பதை வெகு சிலரே அறிவர். திடமான பூமியில் ஏக்கருக்குச் சராசரி 1500 ராத்தல் அதாவது 3 பாரம் (காய்ச்சல்) மாசூல் கிடைக்கும். "வர்ஜீனியா" என்னும் தேசத்தில் வருடப்பிரதி வருடமும் மணிலாப் பயிரை மாற்றுதலில்லாமல் செய்து வந்ததினிமித்தம், சுமார் 4 பாரம் மாசூல் கொடுத்துக் கொண்டுவந்த பூமிகள்) தற்காலம் அவ்விடத்திய மாசூல் ஏக்கர் ஒன்றுக்கு 780 ராத்தல் என்று கணக்கெடுக்கப்பட்டது. இதனால் சதாகாலமும் ஒரு பூமியில் மணிலாவை மாற்றுதலில்லாமல் பயிர் செய்து வந்தால் எவ்வளவு கெடுதலென்பது அறியக் கிடக்கிறது. வடக்குக் கரோலினா என்னும் நாட்டில் ஏக்கர் ஒன்றுக்கு மாசூல் 930 (ராத்தல்). இந்தியாவில் மணிலாவுக்கு முக்கிய பாகமாகிய சென்னை இராஜதானியில் சராசரி மாசூல் 1030, பம்பாயில் 1800 ராத்தலும், பர்மாவில் 775-ராத்தலு மாகும். இன்னும் பல நாடுகளில் பற்பலவிதமாக மாசூல் கிடைத்து வருகிறது. ஆனால், ஜப்பான் தேசத்தினுடைய மாசூல் ஏக்கருக்கு 878 (Bushel) அல்லது 2175-ராத்தல் கொடுத்திருக்கிறது. இது மிகவும் சிலாக்கியமான மாசூல் என்று எண்ணப்படும்.

* நமக்குத் தெரிந்த வரையில் இங்கு இம்முறை கையாளப் படவில்லை.

Varieties தினுசுகள்.— அதிக காலமாய்ப் பயிரிட்டு வரும் ஒவ்வொரு தேசத்திலும் ஓர் குறித்த மணிலாத்தினுசானது ஆதியிலிருந்ததைப் போலவே எப்பொழுதும் இல்லாமல் அவை குணத்தில் தானாகவே மாறுதலடைந்து வருகிற தென்பதைப் பார்க்கப் பட்டிருக்கிறது. இதிலிருந்து என்ன யூகிக்கலா மென்றால் அந்தந்தத் தேசத்தின் அமைப்பு, உஷ்ண நீர்வள நிலவள முதலிய நிலைமைகளுக்குத் தகுந்தவாறு பற்பல தினுசு மணிலாச் செடிகளிலிருந்து ஓர் குறித்த தேசத்திற்கு வேண்டியதும், அது எவ்விதத்திலும் அந்த தேசத்துக்கு ஒத்து வரக்கூடியதுமான ஒரு புதியத்தினுசைப்பொருக்கி எடுத்துக்கொள்ளலாம். மாசூல் குறைந்து விட்ட நாடுகளில் அந் நாட்டின் விரைகளைப் பிரயோஜனப்படுத்தாமல் வேறுதினுசையோ அல்லது மறு நாட்டிலிருந்து பெற்ற விரைகளையோ உபயோகித்து மணிலாப்பயிரையும் அதன் மாசூலையும் விருத்தியாக்கப்பட்டிருக்கிறது. மணிலாச் செடிகளுக்கு அநேக விதப் பூஞ்சாண நோய்களால் தாக்கப் பட்டவூர்களிலும், அவ் விடத்திய விரைகளை உபயோகஞ் செய்யாமல் வேறு நாட்டிலிருந்து பெற்ற விரைகளை விதைத்துப் பயிர் செய்தால் அந் நோய்களை ஒழித்து விடலாம். ஆனால் இது விஷயத்தில் வரவழைக்கப் பட்ட விரைகள் நோயற்றனவா வென்று முன் கூட்டித் தெரிந்து கொள்ள வேண்டிய தவசியம். இரண்டு தினுசு மணிலாச் செடிகளின் பூக்களின் இயற்கையாலன்றிச் செயற்கைச் சம்மந்தத்தினால் முதல் இரண்டு மல்லாத மூன்றாவதாகிய புதியதினுசு ஒன்றை உண்டாக்கும் முறையில் இது வரைக்கும் ஒன்றும் முயற்சி செய்யப் படவில்லை.

(Production of new varieties by crossing on modern genetic lines )

தொடரும்.

ஆ. சு. நி. ரெட்டி.

## News & Notes

### குறிப்புகள்

இலங்கைத் தோட்டங்களிலுள்ள தோட்ட சொந்தக்காரர் 10-வயதுக்குட் பட்ட ஆண் பெண் ஆகிய இருதர இந்தியத் தொழிலாளர்களின் பிள்ளைகளையும், வேலைக்கு வைப்பதாகக் கண்டு பிடிக்கப் பட்டால் அத்தோட்ட சொந்தகாரர் குற்றத்திற்குள்பட வேண்டிவருமாம். ஏனெனில் 10-வயதுக்குட் பட்ட பிள்ளைகளுக்குக் கட்டாயக் கல்வி சொல்லிக் வைக்கப் படவேண்டு ன்று புதிய தொழிலாளர் சட்டத்தில் விதி ஏற்பட்டிருக்கிறதாம்,

# COCONUT.

## (Continued from Vol. X. Page 253.)

## தென்னை

### கிருஷிகன் 10ம் வாலம் 253ம் பக்கத் தொடர்ச்சி.

### விரைநெத்து தேர்ந்தெடுப்பு

விரையமைவதுக்குத் தக்கவாறுதானே பருபிண்டாகும். விரையொன்று போட சுரையொன்று முளைக்குமா? வென்று பழமொழி வாசாமகோஷாமாய் வழங்குவதே தவிர விரை தேர்ந்தெடுப்போர் சங்கியை குறைவே. விரை தேர்ந்தெடுக்காததால் வருந் தாழ்வை சில உதாரணங் கொடுத்து மேல் தென்னை நெத்து பொருக்கு முறையைத் துடர்ந்து கொள்வாம்.

ஒட்டு மாஞ்செடிகள் மிகுதியுங் காய்க்காத தோட்டங்களை காணலாம். ஒட்டுச்செடி கட்டுவதற்கு உபயோகிக்கும் தொட்டியிலுள்ள கண்கள் விளைவில்லாத காயில் பழுத்து மனிதர் தின்று தெருவில் போட்ட பழக்கொட்டையை முளைக்கச் செய்வதாலும் அந்தக் கண்ணில் ஒட்டு கட்டுங்கிளைகள் காய்க்காத மரத்தில் கட்டுவதாலும் நேரே காய்ப்பதில்லை. ஒட்டுச் செடியை விரும்புவோர் தங்கள் நேருன பார்வையில் ஒட்டு கட்டச்செய்து தங்கள் முத்திரையிட்டு ஒட்டிய செடியை துண்டிக்கும் போதும் உடையவர் பார்வையில் துண்டித்து செடி வாங்கினுல் நல்ல காய்ப்புச் செடிவாங்கலாம். வௌவால் தின்று மிழ்ந்த கொட்டை நாத்து பாவியகண்ணில் கட்டவும் வேண்டும். "காணி சோம்பக் கோடி வருத்தம்" என்றபடி சொற்ப செலவுக்குப் பயந்தால் வாழ்நாள் பூருவும் பலனடைய முடியாது.

தோட்டப்பயிர் சாகுபடியில் மிழகாய்ச்செடி தக்க ஊதியங் கிடைக்கும். சிரத்தையாயுங் கவலைசெய்து பயிரிடில் 1 ஏக்கருக்கு 300 ரூபாய் முதல் 600 ரூபாய்வரை கிடைக்கும். கவலையீனமாய் பயிரிடிலோ 50 ரூபாய் வரும்படி யடைவதே கஷ்டமாய்விடும். மிழகாய் நாத்து விலைகொடுத்து வாங்கி நடுவதில் மாசூல் மோசமாய்விடும். விலைக்கு நாத்துபாவுவோர் மிழகாய்பழம் காயப்போட்டதில் உதிர்ந்த விரைசேகரித்து வைத்திருந்து நாத்து பாவுவர். உதிர்ந்தவிரை விலைப்போகாது. உபயோகிக்கவுஞ் சாத்தியப்படாது. தகுதியற்ற விரையை பொருளாக்கும் மோசடி என்று நாத்து வாங்குவோர் கவனிப்பதில்லை. அந்தவிரைகண்கள் நேரே காய்ப்பதில்லை. காய்ப்பு சொற்பமே. மிழகாய்ப் பழம் உதிர்ந்த விரையில் காய் விரைகலந்திருப்பதால் காய்ப்பு

பதில்லே. அற்ப சொற்பங் காய்ப்பதும் பழுத்த பழவிரை உதிர்ந்த தே காய்க்கும். மிழகாய்ப்பயிரை நன்றாய் ஆராய்ந்து பார்த்தால் சிலசெடிகள் நன்றாய்க் குலுங்கி நிறையக் காய்த்திருக்கும். அந்த மாதிரி காய்க்குஞ் செடியில் 30-40 செடி குறிப்பிட்டு கருப்பு, சிகப்பு துணி கட்டி அடையாள மிடவேண்டும். அதில் 2 ம் பறிபழம் பறித்து நன்றாய் உலர்த்தி பானேகளில் வைத்து விரைபழம் என்று விலாச மிட வேண்டும். சாதாரண மிழகாய் வத்தலும் விரைவத்தலுங் கலக்கப் படாதென்பதே. இந்த விரையை நாத்துபாவி நடுவது 1 செடியாவது பழுதாகாது. குலுங்க காய்த்தசெடியேமிகுதியாயிருக்கும். மேல்குரித்த பழவிரை நாத்து 2 இரண்டரை ஏக்கருக்குப்போதும். தேர்ந்தெடுத்த பழவிரை மாதிரி வருடம் தவறாது பொருக்கச் செய்வது உயர்ந்த ஜாதியாகவும் நிறையதிகமாகி காய்க்கும் செடியாயமையும். 2 ம் பறிபழம் விரை ஜாஸ்திபிடித்து வத்தல் நிறையதிகமாயிருக்கும்- நிறையகதிமே விவசாயிகள ஆபேக்ஷிப்பது. மற்ற பறிபழம் நிறை குறையும். ஒவ்வொரு பறிபழத்திலும் 4 படி பழம் வேறே பறித்து காயப்போட்டு நிறைகளேக் குரித்து வந்தால் நாம் கூறும் பொறுக்கு முறையிலுள்ள சந்தேகங் தீர்ந்துதிருப்தியாய் விடும். விலேக்கி விரைகள் நாத்துகள் வாங்குவதிலுள்ள கஷ்டங்தெளிவாய் இப்போ தெரியவரும்.

தென்னங்கண் விலேக்குவாங்கிப் பதிப்பதிலுள்ள சஷ்ட நஷ்டம் சாமான்யமா? தாங்களே நெத்து பாவுவதிலும் நெத்தெடுப்பதிலும் சரியாயனுசரியாமல் நஷ்டமாவதுண்டு. விலேக்கு நாத்துப்பாவுவோர் வேண்டிய நெத்தமையாமல் காயையும் பாவுவர். காயிலுண்டான கண் காய்க்காமல் குரும்பையே உதிர்ந்துபோம். காய்விலேக்கிகண் விலே 3. 4. மடங்கு கிடைப்ப தென்றனுசரிப்பர். கண்வாங்குவோர் விலே சகாயம் பார்ப்பர். பின்வருங் கெடுதி யரியார். தென்னேக்கு பேரெடுத்த செங்கற்பட்டு ஜில்லா இடக்குநாட்டில் பறித்த காயை சில காலங் கருத்கப் போடுவர். காயைப்பிரித்து விற்க வாரம்பிக்கும் போது முளே கண்ட நெத்தை எடுத்து நாத்துப் பாவுவர். இதில் வித்தின் குணமோ மரத்தின் வயசோ தெரியமாட்டாது. இதுபோன்று நெத்துப்பாவுவோர் கவலேயின்மையை வவரிக்கின் விரியுமென்றஞ்சி நிருத்தப்பட்டது. விரைநெத்து பொருக்கு நெத்து கழித்து முறைவிலக்கு முறைஎன்று 2 பிரிவாகும். அவைகளே முறையே விவரிப்பாம்.

நெத்து பொருக்குமுறை

(1) பேட்டுப் பாங்கான தோட்டமாயும் பாசன வசதியுள்ள தாகவும் இருக்க வேண்டும்.

(2) வளமான நிலத்தில் உண்டான தென்னை நெத்து புஷ்டியாயிருக்கும்.

(3) காற்றோட்டமுள்ளதான மரம் விசேஷம்.

(4) லோக்கல்பண்டு ரோட்டோரம் வேலியோரமரம் காற்று வெயில் ஜாஸ்திபடும். அந்தமரம் விசேஷம்.

(5) தண்டு கீழேயிருந்து தலை உச்சிவரை ஒன்று போலிருக்க வேண்டும்.

(6) நெருக்கமான மட்டையும் மட்டை கனமும் பருமனுடையும்30—40 மட்டை யிருக்கவேண்டும்.

(7) *தென்னை அதே மரத்தில் கருதரிக்காமல் இதர மரத்தால் கருசேர்வதால் தோட்ட மரம் எல்லாங் காப்புள்ளதாக விருக்கவேண்டும்.

(8) தென்னை மட்டைவிழுந்த தண்டில் மட்டை தூரமாயுள்ள தவசியம். வளமான நிலத்தில் மட்டை வடு தூரமாய் விலகி யிருக்கும்.

(9) நடுவயது மரம் விசேஷம். பசுபாலிகத்துக்கு பௌவன பருவங்களை குறிப்பிடுவது புஷ்டியாயிருக்கு மென்பது போன்று நடுவயது மரம் போதிய சத்துள்ளதாகும்.

(10) 70. 80 வயசுள்ள தென்னை மரங்களுக்கு 35 முதல் 45 வருடம்வரை நெத்து பரிக்கலாம்.

(11) 40. 50 வயதுள்ள நக்கவாரி ஜாதிக்கு 20 வருடமுதல் 27 வருடம்வரை குறிப்பிடவேண்டும். வயது குறிப்பிடுவது அனுபவத்தை யோசித்தும் பக்க விவசாயிகளையுந் தோட்டக் கூலிகளையுங் கலந்து தீர்மானித்து விடலாம். தரைக்கிருந்து 5 அடி உயரத்துக்கு மேல் தண்டு சுற்றழ வென்னவோ அந்த அழவு தண்டின் உயரத்தின் சில அடிவரை தானிருக்கும். எவ்வழவு உயரத்துக்கு மேல் சுற்றழவு குறைகிறதோ அது நடுவயதுக்கு மேற்பட்ட மரமாகலாம்.

(12) குலைக்காம்பும் தேங்காயை குலைக்காம்பிலிணைக்கிற பூங்காம்புங் குறுகி நீளமில்லாதிருக்க வேணும். குலைகாம்பு கட்டையாயிருக்கில் பூங்காம்புங் குறுகி நீளமில்லாதிருக்கவேணும். குலைகாம்பு கட்டையாயிருக்கில் பூங்காம்புக் குறுகுவதியல்பு. குறுகிய காம்பு குலை முறிவு சம்பவிக்காது.

---

* முற் சஞ்சிகை 219 ம் பக்கம் 3-4 பாரா பார்க்க

(13) வருடம்பூரு காய்ப்புள்ள மரம்விசேஷம். சிலமரம் வருடம் பூரு காயாமல் 2-1 மாதம் காய்த்து மற்ற மாதங் காயேகாய்க்காத மாமும் உண்டு, அவ்விதமரம் சிரேஷ்டமல்ல.

(14) நெருக்கக் காய்த்த மரம் மணிசிறுத்துஎண்ணம் அதிகம் கலக்கக் காய்ப்புமரம் மணிபெருத்து எண்ணங்குரை. நடுத்தர காய்ப்பு மரம் விசேஷம்.

(15) தேங்காய் தார் உள்ளே சுருங்கிவிளாப் பொதுமி உருண்டையாய் உச்சி சர்க்கரைபூசணிக்காயுச்சிமாதிரி• கட்டையாக சுருங்கியது. உரிமட்டை குரை. தேங்காய் மணிபருமன். பருப்பு ஜாஸ்தி. எண்ணெ யதிகங்காண்பதுண்டு.

(16) தேங்காயுரிமட்டை உரித்த ~~ஸ்ரீ~~யில் 3 கண்ணிருக்கும். அதில் I கண்ணில் முளைப்புகண் ஊடுருவி முளைக்கும். அந்தக் கண் $\frac{1}{8}$. அங்குலமுதல் $1\frac{1}{2}$ அங்குலம்வரை குருக்களவுள்ளதாக விருக்கும், கண்ணகலம் எவ்வழ வகலுமோ அதற்குத் தக்க கண்கள் முளைக்கும். பருங்கண் முளை காத்திரமாயிருக்கும். அகன்றகண்ணுள்ள நெத்துக்கு கொல்லத்தில் பிரியஞ் ஜாஸ்தி. அங்கே தேங்காய் விலைக்கி 4. 5. மடங்கு விலை கூடும்.கூடுமானவரை பரிசோதனை செய்து அகன்ற கண் நெத்து பொருக்க வேண்டும்.

(17) நெத்து நன்ருய் முத்தி பழுத்தபின் பறிக்க வேண்டும்.

(18) பரித்த நெத்து 1 மாதம் நிழலில் காற்ருடிய பின் பாவ வேண்டும். நெல் முதலிய தானிய விரை சிலநாள் உலர்த்திப் பாவுவது போலவே உலர்த்தாத நெத்து முளைக்க தாமதப்படும்.

(19) * பிப்ரவரி மாதமுதல் எப்பிரல் மாதம்வரை பறிக்கும் நெத்து சலிசாய் முளைக்கும். இந்த நெத்துகள் 10 ம் வாரத்தில் முளைக்க வாரம்பிவித்து 15 வாரத்துக்குள் பூர்த்தியாய் முளைத்துவிடும். 100 நெத்துக்கு 5. 7. நெத்துக்குமேல் சோர்விருது. சத்து மிகுந்த நெத்து சலிசாய் முளைக்கும். சோர்வுங் குரைவாகும். சலிசாய் முளைக்குங்கண் 6-7 வருடந்தவருது காய்க்கும்.

(20) ஒருபறிகாய்க்கும் மறுபறிகாய்க்கும் அதிகவித்தியாச மிருக்கப்படா.

## நெத்துகளிந்து விலக்குமுறை

(1) பசுபலிதத்துக்கு காளைகுரிப்பிடும்போது வளர்த்திசெழித்த இளங்கன்றுகளையும் காத்தி:ப் பெரிதென்று கிளட்டெருதையும்

* முற் சஞ்சிகை 220 ம் பக்கம் 5-6 பாரு பார்க்க

விலக்குவது போதிய சத்திரு பிறக்கு ஒன்று புஷ்டியாயிரா தென்னை அது போன்று இளமரம் சத்து சேர்ந்திருது. முதுமரம் சத்து குறைவு என்று கழித்து விலக்கவேண்டும்.

நீரூற்று பாறையான தோட்டம் மரம் நோஞ்சு மரம் புஷ்டியாயிருததா லுதவாது.

(3) * நோயுள்ள மரம் விலக்கவேண்டும்

(4) நெருக்கப் போட்ட மரம் காற்றோட்டமிருது. சூரிய உஷ்ணம் படாது. மரங்கள் வளர்த்தி புஷ்டியாயிருது. மெலிவா யிருக்கும். குரோடன் செடிகளை காற்றும் சூரிய ஒழியும்படாத பூமில் வைத்து சிலநாள் வளர்த்தால் செடிமெலிந்து வருவது தெரியும். அது போல தென்னையுமே.

(5) தண்டு இடையில் சிறுத்து மேல் பாகங் கனத்த தண்டு மரம் சிரேஷ்டமல்ல. இடை சிறுத்தது பருமரிப்பு குறைவே. பின் பருவம் செய்ய தண்டு கனதி குடுத்தது இடை சிறுக்கவே மரத்தின் புஷ்டி வளர்த்தி சத்தி குன்றியது திருப்தியாகா.

(6) மட்டை விழுந்தவடு தண்டில் நெருங்கியது கேவல நிலத்தி லுண்டானதே. புஷ்டியில்லாதது கூடா.

(7) குலைகாம்பு நீளம் காயை தாங்க முடியாமல் குலை வளையும். குலை முறிவு ஏற்படும்.

(8) இளங்காயில் முளைத்த கண் விளையுமுன் மட்டை முறியும். குரும்பை உதிரும். காய் பிடிப்பதபூர்வம். பிஞ்சும் உதிரும்.

(9) தேங்காய் வாளைப்பூ மாதிரி நீண்டும் 3 பட்டமாயும் உள்ளது உரிமட்டை கனம். மணி சிறுப்பு. பருப்புங்குறை. காய்கனந்தாங்காமல் குலை முறிவு வளைவுண்டாகும். நெத்தாகும்வரை காயிரம் வத்த கூடாமல் குலைகாம்பு மட்டையி லமையாமல் கீழே தொங்கும். குலை முறிவு ஏற்படும்.

(10) இயற்கை வளநிலம் விசேஷம். உரமிட்டதால் மரம் செழிப்பாய் காய்ப்பு மரம் சிரேஷ்டமல்ல. இரவல் ஆபரணம் சுவாதீனமில்லாதது போன்று உரத்தால் காய்ப்பு சாஸ்வத சத்தமையாது.

(11) † மேமாதமுதல் ஜனவரி மாதம் வரை பறிக்கும் நெத்து சத்து குறை. இந்த நெத்து பாவுவதில் 14 வாரம் முளைப்பாரம்பிவி

---

* முற் சஞ்சிகை 245 ம் பக்கம் 246 ம் பக்கம் 1-2 பாராக்கள் 248ம் பக்கம் 5 வது பாரா பார்க்க.

† முற் சஞ்சிகை 220 ம் பக்கம் 6ம் பாரா 5. 6. 7. வரிகளைப்பார்க்க.

த்து 25 வாரத்தில் முளைப்பு பூர்த்தியாகுது. 100 க்கு 20 நெத்து முளையாமல் சோர்வாகிறது. கண் 10. 12 ம் வருடம்வரை சென்று காய்க்கிறது. சத்து குறைவால் கண்முளைப்பு தாமதமும் காய்ப்பாரம்பிக்க நாளாகிறது. இந்த கண்களில் சில ஏகதேசமாய் 6- 7 ம் வருடங் காய்க்கலாம். மிகுதியாய்க் காய்ப்பதை கவனிக்க வேணும். ஏகதேசமாய்க் காய்ப்பதை ஊர்ஜ்ஜிதமான அத்தாக்ஷியாகாது. அரிதாய் காய்த்ததோர் மாத்து மகரந்தம் சிரேஷ்டமான மரத்தால் கருவோற்பத்தியா யிருக்கலாம்.

## நாத்துபாவல்

பர்மாவிலும் தென் கன்னடம் ஜில்லாவிலும் தென்னை நெத்துகளை 3-4-மாதங் கிணற்று ஜலத்தில் போடுவார். 4-மாத முடிவில் முளையாத நெத்தை விலக்கி முளை கண்டதுகளை பாத்திகளில் நாத்து பாவுவர். சதா ஜலத்தில் நெத்து போடுவது ஜாஸ்தியான நெத்து பழுதாய் விடும். இதை சிரேஷ்டமான முறை யென்று சொல்லப் படாது. காச்சல் பாச்சல் இல்லாத பயிர் புஷ்டியாயுண்டாகமாட்டாது. தென் கன்னடத்தில் கவர்ன்மெண்ட் பாரம் மானேஜர் போதனையால் பிரதமத்திலேயே பாத்திகளில் நாத்து பாவு முறையனுசரிக்கத் தொடங்கியுள்ளன. சில தீவுகளில் கண்பாவி நடுவது மரம் ஓங்கி வளரவில்லை என்று கண் பதிக்க வேண்டிய இடத்தில் நெத்து பதித்து ஜலம் விட்டு வருவதாக பிரஸ்தாபிக்கப்படுது. சிலோனில் பிலா, மா, மரங்களில் 2- 3-தென்னை நெத்து மேற்றொலியில் ¼ இஞ்சு உரித்து முடிந்து கட்டி விடப்படுது. நெத்து கோர்வை குலைகோறும் நெருக்கமாய் காண்பது அசாப் பொருளாயினும் பூர்வ கன்மம் கழித்து புனிதமாக்கும்படி பிலாமரத்தில் சுமையேற்றி கன்மங்கழிக்கும் ஜெகதீஸ்பரர் அற்புத திருவிளையாடலை அழவிடற்பாலதோ? சிலபாக மரங்களில் ஆலமரம் பொறுத்திருப்பது பூர்வகன்மம் ஒழியும் பொருட்டேயாம்.

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் தமக்கின்னா பிற்பகற் றாமே வரும்"

என்ற முதுமொழியை கவனியாது பிறருக்கு தீங்கிழைப்போர் கெடுவதின்னணம். அசாப்பொருளான மரமே கன்மமனுபவிக்கும் போது மாந்தர் மீளக் கூடுமா?

அங்கே 3. 4. மாதம் மழையிருப்பதால் நெத்து முளை காண்கிறது. அதை பாத்தியில் பதித்து கண்வளர்ந்தவுடன் நடப்படுகிறது.

சிலோன் சில பாகம் நாத்துபாவி கண்வளர்ந்த பின்பு நடும் வழக்க முண்டென்பதாக கூறவும்படுது.

சாதாரணமாய் மணல் மண்ணில் குழி செதுக்கி தீயெரித்து சாம்பலைச் சிதறிநாத்துப்பாவு முறை* மேற்கு சமுத்திரங்கரை பிரதேசங்களி லாதரிக்கபடுது. கரையான் பாதையால் சாம்பல் கலப்பதாகச் சொல்லலாம். இது சிரேஷ்டமான முறை என்று சொல்ல முடியாது.

நாத்துப் பாவும்முறை நன்றாயறிந்தோர் தோப்பு நிழலில் நெத்து எண்ணத்துக்குத் தக்கபடி வேண்டிய அகலம் நீளங்கொடுத்து ஒன்றரை அடி ஆழந்தணித்து மண்ணைப்புறப்படுத்தப்படும். அந்தக்கிடங்கில் மண் சம்மந்த மில்லாத மணலும் சாம்பலும் கலந்து போட்டு நிரவி நெத்துப்பாவி ஜலம் வார்த்து வருவர். அல்லது பாசான ஜலமாகில் பாச்சிவரப்படும். நெத்துகள் அரை அடி வெளிகுடுத்து பாவுவது பேர்க்க சலிசாகும். வேர் தளமட்டத்துக்கு $\frac{3}{4}$ அடி உயரம் ஜாஸ்திபின்னியிருக்கு. ஜாஸ்தி மணல் போட்டு பாவுவது நீரூற்றுபாதையேற்படாதென்றனுசரிப்பதுமுண்டு. நெத்து நட்டுவசமாய் நடுவது நெத்து உச்சியில் ஜலந்தங்கி கெடுமென்று சிறிது சாய்த்து பாட்டு வசமாய் பாவுவது முண்டு. தோட்ட நிழலில் கண்பாவுவ தெல்லாம் இளங்கண்களுக்கு சூரிய உஷ்ணங்கொடுப்பது தாங்கா தென்பதேயாம். சர்க்கார் பாரங்களில் பந்தல் போட்டு நிழலில் நாத்து பாவப்படுது.

நாத்துபாவிய நெத்து 3, 4 மாதத்தில் முளைக்கும். முளை (2 இஞ்சிருப்பது காக்காய் மூக்கு கண் என வழங்கும்) 1 மாதம்வரை வளருது. முளைத்த 2 மாதத்தில் $\frac{3}{4}$ அடி குருத்துவரும். 3 மாதத்தில் 1 ஒன்றரை அடி உயரத்தில் குருத்து 1ம் பக்க மட்டை 1ம் இருந்து பிரிந்திருக்கும். 6, 7, மாதத்தில் 2 மட்டையும் 1 குருத்தும் 2-2அரை அடி உயரமுமிருக்கும். இவ்வாறு 1 ஒன்றரை வருடம் 4-3 மட்டையும்இருந்து குருத்து மிருக்கும். இதுவரை விசிறிபோல் தென்னோலைபிரியாதிருக்கும். பின்பே தென்னோலை இலைக்கு இலை பிரிய ஆரம்பிக்கும். முளைத்து 8-மாதம் முதல் ஒன்றேகால் வருடம்வரை கண்பேத்துநடுவர். ஜாக்கிருதை குறைவாலும் கண்வளர்ந்தாலும் 100க்கு

---

* மேற்கு சமுத்திரக்கரை பிரதேசம் தென் கன்னடம் ஜில்லா மலையாளம் ஜில்லா திருவாங்கூர் கொச்சிருச்சிய மடங்கினதாகக் கொள்ளவேண்டும்.

10-கண் சோர்வுவரலாம். சோர்வு நஷ்டம் பெரிதல்ல. பின்னால் வளர்ந்தகண் நடவு சரியான காய்ப்பு உண்டாகும். முளைத்தவுடன் நடுவது சோர்வு வாராதென்று அனுசரிப்ப துண்டு. முளைகண் காய்ப்பு மோசமாய் விடுது. நேரே காய்ப்பதில்லை- காய்க்கவும் 15-வருடத்துக்கு மேலாகிறது. முளை கண்களுக்கு சரிபாய் ஜலம் வார்க்காதிருந்தாலும் தேங்காய் மேற்றொலி ஈரங்காத்து கண் சோர்வாவதில்லை. சுவாமி அபிஷேகத்துக்கு (கௌளி பாத்திரம் மஞ்சள் நிறமானது) இளநீர் விசேஷமென்று எல்லாரும் விரும்பி கௌளிகண் தேடுவர். வேண்டிய கண்ணமையாது. கௌளிகண் முளைப்பது அபூர்வமா யிருக்கும். குருமுளைக் கண்ணே பதிக்க நேரும். கௌளி ஏகதேசமே மிகுதியாகக் காய் வரும். அநேக காய்ப்பு மோசம். குரு முளைப்பதித்ததால் காய்ப்பு மோசமாய் விடுமென்பது இப்போ தெரியவரும்.

அனந்தப்பூர் ஜில்லா இந்துப்பூர் அதேஜில்லா மடக்கசிறாதாலுகா அமலாபூர்-கோதாவிரி ஜில்லா சிலபாகம் மைசூர் ராஜ்ஜியம் டிப்டோர்குப்பி இந்த பாகங்களில் கண் முளைத்து 6-மாதத்தில் 1-ஏக்கரில் 500கண் பதித்து 3-4-வருடமான பின் கண்பேத்து தேரியகண்களில் 7-8-ஏக்கரில் 350-400 கண் நடவாகும். பதியம்போடுவது சிரேஷ்டமான முறையே'

ராமனாதபுரம் ஜில்லா ராஜபாளையத்தில் கண்முளைத்த மருமாதம் 30-40-படி ஜலம் பிடிக்கும் மட்பாண்டங்களில் மணல் போட்டு அதில் கண்ணை வைத்து 3 வருடம் ஜலம்விட்டு பின் நடவாகும். மணலில் யாதொரு உணவுமில்லை. வளர்த்திக்கு வேண்டிய உணவில்லாமல் தவிக்கும். பாலற்ற குழந்தை போல் கண் மெலிந்தேயிருக்கும். பானையில் கண்வளர்ப்பது சிரேஷ்டமானதல்ல.

கண் நடவுதூரம்

சென்னை ராஜதானியில் நெருக்கமாயுள்ள தென்னந் தோட்டமே மிகுதியுங் காணலாம். கலக்க மரமுள்ள தோட்டம் ஏகதேசமே. 1-ஏக்கரில் எவ்வளவு தென்னை வைத்தால் விருத்தியாகு மென்று யோசனையின்றி ஆசைக்கி அழவில்லை என்று மாமுற்பத்தியாக்கப்படுது.

"ஆழவமுக்கி முகக்கினும் மாழ்கடனீர் நாழிமுகவாது நானாழி தோழி நிதியுங்கணவனும் நேர்படினுந்தம் விதியின்பயனேபயன்"

என்ற மூதுரைப்படி எவ்வளவு வரும்படி யுண்டா மென்றும் மரம் விர்த்தியாகா தென்பதும் வெளிப்படை.

சென்னையிலும் *தஞ்சாவூர் ஜில்லாவிலும் 10 அடிக்கொன்று விதம் தென்னை மரமிருக்கும். அதாவது ஏக்கருக்கு 450 மரமாகும். இந்த மரமட்டை ஒன்றோடொன்று மோதி வேண்டிய சூரிய உஷ்ணமுங் காற்றோட்டமும் இராது. மரங்கள் பலதிக்காய்வளைந்து உண்டாவதில் சூரிய உஷ்ணந்தேடச் செல்வதறியலாம். அப்படிச் செல்வதில் சிலமரங்களே வளர்ந்தும் மற்றமரங்கள் நிழலுக்குள்பட்டு மெலிந்தே வரும். உயர்ந்து வளர்ந்த மரங்களே ஏக்கருக்கு வேண்டிய சங்கியை தெரிவிக்கும். அதுவே தோட்டத்துள்பாகமரம் 60-70 மரமும் வேலியோரம் 20-30 மரங்கள் காய்ப்புக்குத் தகுதியாகும். காயாத மரம் பூபாழாவதே தவிர பயனென்ன? ஏகதேசங்காய்ப்பதுவும் சரியான காய்ப்பிராது. நெருக்கி நடலாமா வென்று வினவினால் 8 அடிவாழை 16 அடி தென்னை என்று சமாதானங்கூறுவர். பழமொழி பொருந்துமா வென்று யோசிப்பதில்லை. நக்கவாரி தென்னைமட்டை சாதியடிக்கி 14 அடிக்கி மேலிராது. அவைகளுக்குங் கூட கம்மியாகக் கண்பதிப்பது உசிதமல்ல. பெரிய தென்னைமட்டை 30 32 அடியிருக்கும். அதுக்கெவ்வழவும் பழமொழி பொருந்தவே செய்யாது. அனுபவத்தின் மேல் சாஸ்திர மேற்பட்டது. அனுபவத்துக்கொவ்வாத சாஸ்திரம் விலக்க வேண்டியதே. நெருக்கமாய் நட்டதால் சென்னை ஸெந்தோமின் கடற்கரை மயிலாப்பூர் தென்னை பூவிரி காண்பதே தவிர நேரே காய்ப்பதில்லை. கள் குத்தகை மரம் 1-க்கு ஒன்றரை ரூபாய் வரைபோகும். அதுவும் சிலமரமே தவிர எல்லாமரமும் போவதில்லை. மற்ற ஜில்லாக்களில 7-ரூபாய் வரை 1-மரம் கள்குத்தகை வரக்கூடும். தஞ்சை ஜில்லா ஆடிப்பறி, தைப்பறி-2தரம் பறிப்பது இருப்பினும் ஏகதேசமாய் சிலமரம் காய்ப்பதைப்பார்த்து எல்லாமரமும்சரியாய்க்காய்ப்பதாக சொள்ளப்படாது. மற்ற ஜில்லாக்களில் 4 பறிமுதல் 8-10 தபா பறிப்பாகும். மேற்குக்கரை பிரதேசம் நெத்தே மாதமொருதபா பறிக்கப்படும். தஞ்சை ஜில்லாவில் கனம் பத்திராசிரியர் பிரேரேபனை யாதரிப்பது தக்கபலன் கிடைக்கவே கூடும். தென்னை நெருக்குப் போதாதென்று மா பிலா மரங்களுமிருக்கின்றன. மா பிலாவடி தென்னை நிழலடர்ந்து நேரே

*ஜெருஷிகன 9ம்வாலம் 279ம் பக்கம் 3வதுபாராவில் கனம் பத்திராசிரியர் நெருக்கமான தென்னையை விலக்கி கலப்பிக்கும்படி பிரேரேபனையுஞ் சொன்னதைப் பார்க்க.

காய்க்காது. மேற்குகரைப் பிரதேசமும் சிலோன் சிங்களவர் தோட்டமும் 1-ஏக்கருக்கு 100 கண் நடுவர்- 21 அடிக்கொரு மரமாகும். சிலோன் ஐரோப்பியர்-சதுரமாய் நடாமல் கத்தரிக்கோல் மாதிரியில் 3 கோணமாய் நடுவர். ஏக்கருக்கு 75 மரமாகும். 26 அடிக்கொன்றாகும். போதிய வெளிச்ச மிருக்கும். காய்ப்பு மோசமாவதில்லை. அங்கே தோட்டங்களில் பிரத்தேகமாய் மா, பிலாமரம், வேண்டியது தனியாக நடுவது தென்னைக்கு கெடுதியாகா. இந்தியாவில் மரம் நெருக்கம் போதாதென்று மா. பிலாமரம் ஊடே வைப்பதால் தென்னை நேரே காய்க்கமாட்டாது. கோதாவரி ஜில்லாவில் ஏக்கருக்கு 50மரம் நடப்படுகிறது. 3ல் 1பாகம் மாந்துறைவாய் நடவுநஷ்டம் நியாயமல்ல. 32 அடிக்கி 1 மரமாகும். அநுபவத்தில் 26-அடி நடவு மரத்துக்கும் 32-அடி நட்டமரத்துக்கும் பேதங் காணவில்லை. காய்ப்பு 1-போல் தானிருக்கிறது. 26-அடி போதும். அதுவும் 3-கோண நடவில் ஏக்கருக்கு 75 மரமாகும். ஒரு மரத்து ஊடே காலி நிலங்கிடையாது. தென்னை மட்டைகள் ஒன்றோடொன்று மோதுவதில்லை. 4 கோணமாய் நடவில் ஏக்கருக்கு 64 மரமாகும். மத்ய நிலம் காலியாய்க் கிடக்கும். இடம் பாழாவது வியர்த்தமே. மும்மர நெருக்கமாய் நடவில் 70-80-மரமே மற்ற மரங்களிலும் உயர்ந்து 25 வருடத்துக்கு மேல் காய்ப்புக்கு வரும். நெருக்கடியை சமாளித்துண்டாக நாளாய் விடுகிறது. முன்காலம் போல் இப்போ 80 90-வயதுள்ளவர் கிடையாது. 70, 60 வயதுக்கு மேலிருப்போர் அரிது. இதிலும் பாதி பால்யதசையிலும் வித்யாப்யாசம் ப்ரவிர்த்திகள் முதலிய 30 வருடம் போக பாக்கி வருடத்தில் விவசாயம் செய்ய முயன்று தென்னை டேவ 25-வருடக்காலம் சென்று தென்னை காய்க்கும். பாக்கி 5-ம் வருடம் பிரதமகாய்ப்பு லேசாய் காய்த்து பின்பே நல்ல காய்ப்புண்டாகும். பிரயாசைப் பட்டும் பலனடையாத செய்கை முயல்வதோ சிறப்பு? தாங்களே பலன் சுலியாய் கிடைக்கும்படி கலந்து நடவேண்டும். தென்னை பூமி மா-பிலா-மரம் நடவுங்கூடாது. தனியாக வைப்பது நன்மையைப்பயக்கும் அபரிமித லாபமுண்டாகும்.

வே. ப. திருமலையப்ப முதலியார்,
வெள்ளக்கால் போஸ்டு, கஸ்பா
திருநெல்வேலி ஜில்லா.

| வால்யம் | பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| | 245 | முகப்பு | 4 | 22 | 222 |
| | 245 | 2 | 3 | வெட்டி | தூரம் வெட்டி |
| | 245 | 2 | 1 | புழு | அணு கிருமி |
| | 245 | 2 | 4 | சுண்ணாம்பும் | நீற்றிய சுண்ணாம்பு தூளும் |
| | 245 | 3 | 6 | மேல்மட்டை | மேல்வரிசை மட்டை |
| | 247 | 2 | 2 | சற்றுகோடு | சுற்று கோடு |
| | 247 | 4 | 3 | முட்டை | வலை |
| | 247 | 5 | 4 | முட்டை | நோயணுக் கருக்கள் |
| | 247 | 5 | 6 | வண்டு | நோயணு |
| | 247 | 5 | 6-7 | அழியாதவாறு கூடாரம்போல அமைந்துள்ளது | கருவோற்பத்தி செய்யாமல் அந்தவலைகளை புள்ளிநோயணுவை யுண்டாக்குகிறது. |
| | 247 | 5 | 7 | வண்டு | அணுகிருமி புள்ளி பாதித்த மட்டை குழிவாயிருக்கும் |
| | 247 | 6 | | முடிந்தவுடன் | மட்டை வடுப்பக்க மட்டையோலை அர்த்த சந்திரவடிவமாய்ஓலைகளில் புள்ளி காணப் படும்என்று அமைத்துக் கொள்க |
| | 247 | 5 | 2 | 10 | 8 |
| | 248 | 1 | 1 | காணலாம் | அர்த்த சந்திரவடிவமாய் புள்ளிகாணலாம் |
| | 246 | 2 | | முடிந்தவுடன் | புதுப்பாருவாக கீழ்வருவன சேர்க்கவும்வேண்டும். சிலமரங்களில் தண்டு உள்சோரு சிலவிடம் மடித்து கையால் பேர்க்கக்கூடிய பொந்தாகவும் நீண்ட குழாயாகவு மிருக்கும். தண்டில் சொற்ப செகப்பு மச்சமிருக்கும். இது நீரூற்று நிலத்திலும் கேவல நிலத்திலும் உண்டானமரங்களிலிருக்கும். மேல்பாருவில் கூறியபடி உரமும் சுண்ணாம்பும் சேர்த்தால் மாறும். |

## தென்னை பிழைதிருத்தம்

| வாலம் | பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| | 219 | 1 | 6 | ஷை | *இந்தபுள்ளிக் குறியை அடிக்குறிப்பு 2ம் பாரா முகப்பிலுமமைக்க. |
| | 249 | 2 | 1 | 4 | 4†† இவ்விதக் குறியிடு போட்டும் அடிக்குறிப்பு 3ம் பாரா. சாசர் கோட்என்பதுக்கு மூன்றும் அமைக்கவும் |
| | | | | பிழை | திருத்தம் |
| | 249 | 2 | 10 | நீரூயா | நீரூவியா |
| | 249 | | | முடிவு அடிக்குறிப்பு வேதபாரா வெட்டுக்கிளி | புழு |
| | 250 | 4 | 8 | குழவியுள்ள | இலைபரிப்பு புழுவின்மேல் குழவி முட்டையிட்டதான |
| | 251 | 2 | 3 | கொம்பின | கொப்புபின் |
| | 252 | 3 | 7 | விடகிழக்கு | வடகிழக்கு |
| | 252 | 3 | 11 | சவரியாக்க | சவரிபொச்சங் |
| | 252 | 4 | 2 | தத்தபொடியில் | பூறூஅடித்துவிட |
| | 253 | 1 | 2 | சருப்படரி | கருப்புமிருந்த |
| | 250 | 4 | | முடிந்தவுடன் | குழவிபச்சை புழுவை உயிர் போகாதபடி குற்றுயிரு யிருக்குப்படி கொட்டி கூட்டில்வைத்து குழவி முட்டையிடும். முட்டைபொரித்தவுடன்குஞ்சுப் புழு பச்சைப்புழுவைத்தின்று வளர்ந்துபருவமானவுடன் கூண்டைத்துளைத்துக்குழவியாகவெளியாகும். இதையரியாமல் பச்சைப் புழுவே குழவியா மென்று கூறுவதுபிழை யென்றறைக்கவேணும் |

வெ. ப. திருமலையப்ப முதலியார்
வெள்ளகால் போஸ்டு கஸபா
திருநெல்வேலி ஜில்லா

## CORBESPONDENCE.

### கடிதம்

ம-ா-ா-ஸ்ரீ கிருஷிகன் பத்திராதிபர் அவர்கள் சமூகத்திற்கு.

லட்டூர் கிராமத்தில் என்னிடம் தென்னந் தோப்பை நன்ருய் மாஜுன் கலப்பையினுல் உழவு செய்த மரத்தைச் சுற்றிலும் சுமார் 3அடி உயரத்துக்கு மண் அணைத்திருக்கிறேன் அம்மாதிரி மண் அணைப்பதினுல் மரங்களுக்கு மேலே வேர் இறங்கி கெடுதி நேருமென்று அனேக விவசாயிகள் என்னிடம் சொல்லிக் கொண்டு இருக்கிருர்கள். அம்மாதிரி செய்ததினுல் மரத்துக்கு கெடுதல் உண்டாகுமா? தென்னந் தோப்புகளில் கினியாபுல் பயிரிடுவதற்கு தூர்கள் எவ்விடம் கிடைக்கும்? 1 ஏக்கர் நட எவ்வளவு தூர்கள் தேவை? மேல்கண்ட விஷயங்களுக்கு விவரமாய் எனக்குப் பதில் தெரிவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்பார்ந்த ஐயா,

### பதில்

தங்களுடைய 6-2 28 லெட்டர் கிடைத்தது. தென்னை மரங்களைச் சுற்றி உழுது அல்லது கொத்தி விடவேண்டுமே தவிர மரத்தின் தூரில் பூமி மட்டத்திற்கு மேல் மண் அணைக்கக் கூடாது. தாங்கள் செய்திருக்கும் வேலை 3அடி உயரம் மரங்களைச் சுற்றி மண் அணைத்திருப்பதாகத் தெரிகிறது. இப்படி மண் அணைத்தால் மேலே குவிச்ச மண்ணில் புது வேர்கள் இறங்கிக் கீழிருக்கும் வேர்கள் பலம் கெட்டு மேலேயே வேர் ஓட ஹேதுவிருக்கும், எப்போதாவது பெருங்காற்றும் மழையும் சம்பவித்தால் வேர்கள் மேலே போயிருப்பதால் அவைகள் காற்றுல் அசைக்கப் பட்டு மரங்கள் சுலபமாய் கீழே விழ இடங்கொடுக்கும் ஆகையால் இம்மாதிரி மரங்களைச் சுற்றி மண் அணைத்தல் நல்ல தல்ல.

தென்னந் தோப்புக்கு கினியாபுல் 2 முதல் 2அரை அடி தூரத்திற்கு அல்லது 3அடி தூரத்திற்கு ஒருதூர் நடலாம். இதைவிட சிலர் நெருக்கியும் நடுவதுண்டு. ஆனுல் புல் வளர வளர கஷ்டங் கொடுக்கும். ஆகையால் 2 இரண்டு அடிக்கு ஒருபுல் அலகு நடுவது நலம். 2அடி இடைவிட்டு ஒரு ஏக்கரில் நட சுமார் 10890 முதல் போகும். 3அடி தூரத்திற்கு ஒருசால் போட்டு சால்களில் 2அடி தூரத்திற்கு ஒரு புல் நட்டாலும் நடலாம். இப்படி நட சுமார் 7260 செடிகள் வேண்டியதிருக்கும். தென்னந் தோப்புகளில் கினியாபுல் நட்டு பயிர் செய்ய உத்தேசித்தால் தென்னை மரங்களுக்கும் புல்லுக்கும் சரியானபடி எருச் செய்யவேண்டும். இல்லையாகில் தேங்காய் காய்ப்பு கம்மிப்படும். தங்கள் இலாகா விவசாய டெப்டி டைரெக்டருக்கு எழுதினுல் கினியாபுல் தூர்கள் கொடுப்பார்கள். ப. ர்.

ஐயா,

தயவுசெய்து "கிருஷிகன்" ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகைக்கு என்னை ஒரு சந்தாதாரராகச் சேர்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். ஷை பத்திரிகையில் 1926 -1927 ஜனவரிமீ பத்திரிகையில் பிரசுரம் செய்திருக்கிற "ராமச்சந்திர ஏற்றம்" என்னும் தண்ணீர் இறைப்புக் கருவிக்குரிய சாதனங்கள் பூருவும் அடங்கிய புஸ்தகம் ஒன்றும் ஷை கருவி எந்த இடத்திலிருக்கிறதென்றும் சென்னை இராஜதானியில் எந்த இடத்தில் வைத்து உபயோகிக்கிருர்களென்றும், விவரமாய் எழுதியனுப்பக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஷை மாதாந்தப் பத்திரிகையை வி.பி. மூலமாக அனுப்பக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புக்குரிய

A. B. சண்முகம் பிள்ளை

### பதில்

"ராமசெந்திரா ஏற்றம்" என்னும் தண்ணீர் இறைப்பு கருவிக்குரிய சாதனங்கள் பூராவும் அடங்கிய புஸ்தகம் நம்மிடத்தில் கிடையாது. சமீபத்தில் ஸ்ரீமான் ராமசெந்திர ஐயர் அவர்களை சென்னையில் நடந்த அகில இந்திய விவசாய கைத்தொழில் கண்காக்ஷியில் நாம் பார்த்துப் பேசிய போது அவர்கள் தற்காலம் சபர்மதி ஆஸ்ரமத்துக்குச் சமீபமாய் இருப்பதாயும் பம்பாய் இராஜதானியில் சில பிரமுகர்கள் அவரின் மேல் இராமசந்திரா ஏற்றம் கவலை முதலானதுகளை அந்த இராஜதானி கிருஷிகருக்கு உபயோகமாகும்படி பரவச் செய்து கொண்டிருக்கிறார்களென்றும் சொன்னார்கள். அவர்களுக்குக் கடிதம் எழுதி தெரிந்து கொள்ள விரும்புவோர் சென்னை மைலாப்பூர் சென்டிரல் அர்பன் பாங்கி காரியதரிசி ஸ்ரீமான் வி. சி. ரங்கசாமி ஐயங்கார் மேல்பார்த்து V. ராமச்சந்திர ஐயருக்குக் கொடுப்பது என்று எழுதினால் அனேகமாய் வந்து சேருமென்றும் சொன்னார்கள். நாம் இந்த ஏற்றம் சென்னை மைலாப்பூரில் ஸ்ரீமான் தேசிகாசிரியவர்கள் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்ததை சில மாதங்களுக்கு முன் பார்த்ததுண்டு. தற்காலம் எங்கே அது வேலை செய்து கொண்டிருக்கிறதென்று நமக்குத் தெரியாது. மேல் சொன்ன ஸ்ரீமான் இராமசெந்திர ஐயர் அவர்களுக்கு எழுதினால் அவர்கள் கிருஷிகருக்கு வேண்டிய உதவி புரிவார்கள் என்பது எமது நம்பிக்கை.

ஐயா,

ப. ர.

நான் தற்சமயம் இவிடம் வந்து மூன்று வாரமாகிறது. மறுபடியும் ஒரு வாரத்தில் செங்கோட்டை போவேன். நான் ஒரு சிறிய ஆலயம் கட்ட ஆரம்பித்திருக்கிறேன். அதைச்சுற்றி ஒரு தோட்டம் போட்டு அதை அவ்வாலயத்துக்கு சாசுவதமாக விட உத்தேசித்திருக்கிறேன். அவ் ஆலயத்தின் பூஜை நிவேதனம் முதலான வகைக்கு வேண்டியவைகள் பூராவும் அதில் கிடைக்கக் கூடியதாக புஷ்பச் செடிகள் பழச் செடிகள் கூடன் சாம்பிராணி முதலான எல்லா விருக்ஷங்களும் உற்பத்தி செய்யவேணுமென்பது என் கோரிக்கை. ஆலயத்தை ஒட்டி குடியிருக்கிறவர்களுக்கு வேண்டியவைகளான காபி, கொக்கோ, முதலான செடிகளும் வேணும். இது விஷயமாக தங்கள் உபதேசம் கேட்டுச் செய்வது நன்மையாயிருக்கலாமென்று எண்ணி இது எழுதத் துணிந்தேன். கூடன் மரத்துக்கு கன்றுகள் கிடைக்குமா? எங்கே வாங்கலாம் (2) சாம்பிராணிக்கு பதிலாக மட்டிப்பாலென்றதொரு மரத்தின் பால் உள்ளதாகத் தெரிந்தேன். அது கன்றுகளாகவோ, விதையாகவோ கிடைக்குமா? எங்கே? அதுபாலுள்ள மாமரமான சால கம்பு நட்டால் உண்டாகுமா? (3) காபி, கொக்கோ தினிசு கன்றுகள் எங்கு கிடைக்கும் (4) சுருக்கினாயில் சார்ஜில் கரும்பு பிஜி. பீ விதைகள் எத்தனை செங்கோட்டையில் என் விலாசத்திற்குத் தங்கள் தோட்டத்திலிருந்து அனுப்பி தரக்கூடும். செங்கோட்டை அல்லது அடுத்த 4 மயில் தூரத்திலுள்ள பகவதிபுரம் ஸ்டேஷனுக்கு என்ன அடங்கும்? இந்த உதவி எனக்குச் செய்ய தங்களுக்கு அவகாசம் ஏற்படுமா? அவ்புதிய தோட்டத்துக்கு அபூர்வஜாதி புஷ்பச்செடி, பழச்செடி முதலானதுகளின் விதை என்று தங்கள் நோக்கத்தின்படி கிடைத்தால் அதின்படி நடத்த சித்தமாயிருக்கிறேன். பொது நன்மைக்கு உழைக்கிற தங்களுக்கு இது போன்ற வேலைகள் கொடுக்கிறது பாவமென்றும் இதற்கு கைம்மாறு செய்ய நான் சக்தியற்றவனென்றும் தெரிந்தும் வேறு மார்க்கம் தெரியாததால்

எழுதுகிறேன். மன்னிக்கவும் (5) தழை எருக்களில் தயின்ச்சா, கொழுஞ்சி, போஜா, சடம்பு முதலான பல உள. அதில் அதிகலாபமும் குணமும் இலேசுமானது எது என்றும் தெரிய விரும்புகிறேன். தயவு கூர்ந்து உபதேசிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்பிற்கு ஆசைகொண்ட,

சங்கரநாராயண ஐயர்

பதில்

நமது நிருபநேயர் குறிக்கும் பிரகாரம் அவர் செங்கோட்டையில் கட்ட உத்தேசித்திருக்கும் ஆலயத்தைச் சுற்றி சாதாரண பழச் செடிகளும் புஷ்பச் செடிகளும் மற்ற தானியாதிகளும் பயிரிடக்கூடும். ஆனால் சிலதினுசு பழச் செடிகள், காபி, கொக்கோ கற்பூரம் முதலியவைகளுக்குப் போதுமான சீத உஷ்ணமும் சமுத்திர மட்டத்துக்கு மேல் அவைகள் சரியானபடி வளர்ந்து பலன் கொடுக்ககூடிய உயரமும் இல்லாவிட்டால் அவைகளைப்பயிர்செய்வதில் பிரயோஜனமில்லை. சமுத்திர மட்டத்துக்கு சற்று உயரமான இடங்களில் கூட முளைத்துசற்று பலன் கொடுக்க கூடிய சிலதினுசு காப்பிச் செடிகளுமிருக்கின்றன. ஆனால் அவைகள் காய்க்கிறதென்று திருப்தி கொள்ளலாமே தவிர லாபகரமாய் பலன் கொடுக்க மாட்டாது. காபி கொக்கோ முதலியவைகள் மலைப்பிரதேசங்களில் உண்டாகும் வஸ்துக்கள். அவைகள் நிருபர் குறிக்குமிடம் சமுத்திர மட்டத்திற்கு மேல் எத்தனை அடிஉயரத்திலிருக்கிறதென்று எழுதினால் பயிரிடக் கூடுமா கூடாதா வென்று திட்டமாய் எழுதக் கூடும். அத்துடன் அவ்விடத்திய மழையளவையும் எந்தக் காலத்தில் எவ்வளவு பெய்கிறதென்பதையும் தெரிவித்தல் அவசியம். குடன்மாத்துக்கு கண்கள் இங்கு கிடைத்தல் அபூருபம், இது ஜப்பானிலும் கொளம்பிலும் இருக்கிறது. அக்ரிஆர்டிகல்சரல் சொசைடி சூப்பிரண்டெண்டு, தேனும்பேட்டை சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிக் கேட்டால் விலைவிபரம் தெரிவிப்பார்கள். மட்டிப்பால் மரம் கம்புசட்டால் போதும். இதைக்குறித்து பாரஸ்டு டிப்பார்டுமெண்டுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். காப்பிகண்கள் நீலகிரியில் கிடைக்கும். அவ்விடமிருக்கும் கவர்ண்மெண்டு பொடானிகல் சூப்பிரண்டெண்டவர்களுக்கு எழுதிவிலை விபரம்தெரிந்து பெற்றுக் கொள்ளலாம். பிஜி, பி. என்னும் கரும்புக் கணுக்குகள் கிடைக்குமிடம் விலைவிபர முதலியவைகளைத் குறித்து மதுரைசர்க்கிள் விவசாய இலாகாடெப்டி டைரெக்டர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். தயின்ச்சா, கொழுஞ்சி, சடம்பு முதலிய பசுந்தாள் உரப்பயிர்கள் அவைகள் விதைக்க உத்தேசித்திருக்கும் ஒருபோகநிலங்களுக்கும்வடிகால் வசதியுள்ள இடங்களுக்கும் கொழுஞ்சி சிரேஷ்டம். அதேஒருபோக நிலங்களாயும் களிக்கால் நிலங்களாதல்லது கள்ர் சம்பந்தமாயுள்ள நஞ்சைகளா யிருந்தால் டையின்சா நலம். இருபோக நிலங்களில் ஜல்தியில் வளரக்கூடியபயிர் வேண்டு மாகையால் சடம்பு நல்லது. இப்படிப்பட்ட அனேக விஷயங்களைப் பொருத்து பசுந்தாள் பயிர்கள் பயிரிடப்படுகிறது. இவ்விஷயத்தைக் குறித்து விவசாய இலாகாவில் துண்டு பிரசுரங்கள் அச்சடித்து இலவசமாய் கிருஷிகருக்குக் கொடுக்கிறார்கள். அவை தேவையானால் தங்களுக்கு சமீபத்திலிருக்கும் விவசாய டிப்டி டைரெக்டருக்காவது விவசாய டிமான்ஸ்டிரெட்டருக்காவது எழுதி பெற்றுக் கொள்ளலாம். அம்பா சமுத்திரத்தில் ஒரு விவசாய டிமான்ஸ்டிரேட்டர் இருக்கிறதாக நமக்குத் தெரியும்.

## "கிருஷிகன் பஞ்சாங்கம்"

### பிரபவஸு மாசிமூ—சாலிவாகன 1850 கலியுகாதி 5029
### பசலி 1337—கொல்லம் 1103—ஹிஜரா 1346,
### இங்கிலீஷ் 1928-ம் ஸு பிப்ரவரி, மார்ச்சு மாதங்கள்.

| ஷபான்மீ | பிப்ரவரி மீ | மாசிமீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 20 | 13 | 1 | திங் | சப்11-41 | விசா56-3 | ம56சி | கதிரறுக்க |
| 21 | 14 | 2 | செவ் | அஷ்18-1 | அநு60-0 | சி60 | கதிரறுக்க |
| 22 | 15 | 3 | புத | நவ23-48 | அநு3-11 | சி60 | குளம் வெட்ட |
| 23 | 16 | 4 | வியா | தச28-3 | கேட்9-3 | ம9சி | விதைக்க |
| 24 | 17 | 5 | வெ | ஏகா30-28 | மூல13-21 | அ13ம | விதைக்க |
| 25 | 18 | 6 | சனி | து30-53 | பூரா15-51 | சி60 | மாடுவாங்க |
| 26 | 19 | 7 | ஞா | திர29-26 | உத்16-46 | அ60 | மஹா சிவராத்ரி |
| 27 | 20 | 8 | திங் | சது26-16 | திரு15-8 | அ15சி | கதிரறுக்க |
| 28 | 21 | 9 | செவ் | அ ● 19-1 | அவி12-21 | சி12ம | தானியம் செலவிட |
| 29 | 22 | 10 | புத | பிர15-38 | சதை8-28 | சி8அ | விதைக்க |
| 1 | 23 | 11 | வியா | துதி9-13 | பூர3-56<br>உத்56-4 | சி60 | கதிரறுக்க |
| 2 | 24 | 12 | வெ | திரி2-26<br>சது55-41 | உத்2-49<br>ரேவ53-58 | அ60 | விதைக்க |
| 3 | 25 | 13 | சனி | பஞ்49-16 | அஸ்49-16 | அ60 | யாத்திரை |
| 4 | 26 | 14 | ஞா | சஷ்49-21 | பர45-11 | சி60 | கதிரறுக்க |
| 5 | 27 | 15 | திங் | சப்38-11 | கிரு41-51 | ம42அ | கரிநாள் |
| 6 | 28 | 16 | செவ் | அஷ்33,46 | ரோக39-18 | அ39சி | கரிநாள் |
| 7 | 29 | 17 | புத | நவ30-13 | மிரு37-31 | சி60 | கரிநாள் |
| 8 | 1 | 18 | வியா | தச27-16 | திரு36-26 | ம36அ | கதிரறுக்க |
| 9 | 2 | 19 | வெ | ஏகா25-28 | புன36-13 | சி36ம | கிருஷி யாரம்பம் |
| 10 | 3 | 20 | சனி | து24-16 | பூச36-43 | சி37ம | விதைக்க |
| 11 | 4 | 21 | ஞா | திர24-1 | ஆயி38-16 | சி38ம | சாந்தி செய்ய |
| 12 | 5 | 22 | திங் | ச ○ 24-33 | மக40-38 | ம41சி | காமதஹனம் |
| 13 | 6 | 23 | செவ் | பௌ26-16 | பூர44-1 | சி44அ | மாடுவாங்க |
| 14 | 7 | 24 | புத | பிர29-6 | உத்48-33 | அ49ம | கிணறு வெட்ட |
| 15 | 8 | 25 | வியா | துதி33-6 | அஸ்54-8 | சி60 | விதைக்க |
| 16 | 9 | 26 | வெ | திரி38-13 | சித்60- | சி60 | ரிஷேதம் |
| 17 | 10 | 27 | சனி | சது44-13 | சித்0-58 | ம1அ | தானியம் செலவிட |
| 18 | 11 | 28 | ஞா | பஞ்50-48 | சுவா8-21 | சி8ம | வித்யாரம்பம் |
| 19 | 12 | 29 | திங் | சஷ்57-25 | விசா16-11 | ம16சி | கதிரறுக்க |

### திருப்பூர்

# கம்போடியா காட்டன் பிளாண்டிங்

## அண்ட் கதர் மென்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,

கலியுகத்தில் சகல தேசத்தினராலும்

சகல மதத்தினராலும் அவதார புருஷனெனப்

போற்றும் "மஹாத்மாகாந்தி" அவர்களிடம் அன்புண்டா?

அப்படியானால் அவருடைய முக்கிய கொள்கையான கத்தர் அபிவிர்த்திக்காக சதாகாலமும் தம்உடல் பொருள் ஆவிஇம்மூன்றையும் தத்தம் செய்திருக்கிறார். அவர் ஞாபகார்த்தமாய் ஸ்தாபித்திருக்கும் இக்கம்பெனியில் பங்குகள் எடுத்துக் கொண்டு ஆதரிப்பது தங்கள் கடமையன்றோ? பங்குகளுக்கு அதிகலாபம் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. இந்தியாவில் தமிழ் நாட்டில் திருப்பூர் கத்தர் உற்பத்திக்கு மிகவும் பெயர் பெற்றிருப்பது உலகமறிந்த விஷயம். திருப்பூர் கம்போடியா காட்டன் பிளாண்டிங் அண்ட் கதர் மென்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட் ஆபிஸ் அங்கேரிபாளையம் (அனுப்ப பாளையம் P. O. கோயம்புத்தூர் ஜில்லா)

ரிஜிஸ்டர் செய்த மூலதனம் ரூ. 3, 50, 000 பங்கு 1க்கு 10-ரூபா வீதம் 35,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டது. இது பரியந்தம்கொடுக்கப்பட்ட பங்குகள் ரூ. 1,61,600. இன்னும் கொஞ்சம் பங்குகள் தான்கொடுக்க உத்தேசம். தகுந்தலாபம் பங்குகளுக்குக் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை.

ஸ்பெஷலாக டிபாசிட்டுகளுக்கு தகுந்த வட்டி கொடுக்கப்படும். 5 வருஷத்திய டிபாசிட்டிக்கு 100க்கு 1வருஷத்துக்கு 10-ரூபா வீதம் வட்டிக்குப் பெற்றுக் கொள்ளப்படும். சகலமான டவுன்களுக்கும் தக்க கமிஷன் பேரிலும் சம்பளத்தின் பேரிலும் ஏஜண்டுகள் தேவை, இந்த கம்பெனியை சென்னை கவர்ன்மெண்டு விவசாய அசிஸ்டெண்டு டைரக்டர் ஸ்ரீமான், K. N. K. சுந்திரம் அவர்கள், தாசில்தார், வக்கீல்கள் மதராஸ் N. தண்டபாணி பிள்ளை முதலிய அனேக கனவான்கள் விஜயஞ் செய்து பார்த்து தகுந்த சர்டிபிகேட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். இன்றே இந்த விளம்பரத்தை வெட்டி யனுப்புங்கள்.

ஐயா, இக்கம்பெனியில் நான்........பங்குகள் எடுத்துக்கொள்ள, விரும்புகிறேன். ஆதலால் தயவு செய்து பங்குவிண்ணப்பத்தை கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பக் கோருகிறேன்.

முழுப் பெயர்..........................................................

பூரா விலாசம் தொழில் விபரம்..........................................

தபால் ஆபீஸ்..........................................................

ஜில்லா................................................................

## The Journal of the Madras Agricultural Students' Union

A monthly Journal in English devoted to the Study of Improved Agriculture. Articles of Scientific and general interest are published along with Extracts & reviews from various Journals both Indian & foreign. Subscription per annum Rs. Four. Single copy as Six.

Apply to Manager M. A. S. U. Journal.
AGRICULTURAL COLLEGE, LAWLEY ROAD P. O. *Coimbatore.*

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

## சண்பகவிஜயம்

இந்த நாவல் "இது சிறந்த நாவல்" படிப்பதில் ஆர்வ முடையோர் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத்தொடங்கினால் முடிக்காமல் புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வாராது.

இது பால விநோதினிப் பத்திராசிரியராகிய வரகவி. திரு. அ சுப்பிரமண்ய பாரதியார் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில்எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச் சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும் நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம குணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேகமேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறபடியால், இந்த நாவல், கேவலம் நாவல் வகையில் எண்ணிப் புறக்கணிக்கத்தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம்.

ஜெகன் மோகினி ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

## விவசாய புத்தகங்கள்

| | ரூ அ பை |
|---|---|
| விவசாய விளக்கம் | 1—4—0 |
| நெல் | 1—0—0 |
| கரும்பு | 1—0—0 |
| மா | 0—7—0 |

தபால் சார்ஜ் வி. பி. முதலியன பிரத்தியேகம்

ஜி. இராஜகோபால் நாயுடு
பென்ஷண்ட் விவசாய இன்ஸ்பெக்டர்

Printed and Published by J. R. Ranga Raju at the Raju Press" "Jagannatha Baugh" Saidapet, (Madras.)